FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301611

1. District : தூத்துக்குடி PS: V & Ac Year: 2026 FIR No.: 13/26 Date: 28.08.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 27.08.26
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 18.50 hrs Time to : 23.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 28.08.26 Time : 16.15 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 28.08.26 Time : 16.15 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 22 KM வடக்கு
Beat Number : (b) Address : சார் பதிவாளர் அலுவலகம்,
முறைக் காவல் எண் முகவரி வேடநத்தம், தூத்துக்குடி மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. வீரசெழியன் (b) Father's/ Husband's Name : இராமசாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 55/26 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : அலுவலர் (g) Address : மாவட்ட அலுவலகம்
தொழில் அலுவலர் முகவரி மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு. / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/08/26

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

28/08/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.08.26 at 17.30 hrs

Name: பெயர் ஏ.ஜேசுதாஸ்

Rank: நிலை காவல் ஆய்வாளர், உ.தி.கி. பாவு, திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 13/2026, சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வ.எண்.7 தெரிந்த / ஜயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டவரின் முழுமையான விபரங்கள்.

1.	திரு.T.ஜெயக்குமார் வயது 46/2026, த/பெ.திரு.தண்டபானி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், வேடசந்தூர் சார்பதிவகம், திண்டுக்கல், மாவட்டம்.
2.	திருமதி.S.M.கவிதா வயது 42/2026, க/பெ.திரு.வெள்ளைச்சாமி, கணிணிவிபர பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம்,
3.	திரு.K.பாண்டியன், வயது 61/2026, த/பெ.திரு.காளியப்பன், அலுவலக உதவியாளர் (ஓய்வு), தற்காலிக பணியாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம் மற்றும்
4.	திரு.A.பிச்சைமுத்து, வயது 30 /2026, த/பெ.திரு.அரிச்சந்திரன், தற்காலிக பணியாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 13/2026, சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் வ.எண்.12 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய ஆகிய நான் இன்று 28.08.2026ம் தேதி மாலை 16.15 மணிக்கு நிலையத்தில் இருந்த போது மதுரை ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.R.வீரச்செழியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணிணி தட்டச்சு செய்யப்பட்ட புகாரை பெற்று 28.08.2026ம் தேதி 16.15 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.R.வீரச்செழியன், த/பெ.இராமராஜ், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை. பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல் மாவட்டம் அய்யா, நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து

வருகின்றேன். நேற்று 27.08.2026-ம் தேதி திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் மற்றும் அலுவலர்கள் பத்திரபதிவிற்காக வரும் பொதுமக்களிடம் பத்திரங்களை பதிவு செய்வதற்கும், பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை திரும்ப ஒப்படைப்பதற்கும் வில்லங்க சான்று பெறுவது போன்ற சேவைகளை வழங்கவும், பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சத்தை பணமாக கேட்டு பெறுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நேற்று 27.08.2026-ம் தேதி மாலை 18.00 மணிக்கு திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து நான், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ஜெ.ரூபா கீதாராணி மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் சோதனை செய்வதற்காக அரசு வாகனம் TN 22 G 1040 பொலிரோ வாகனத்தில் வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 18.50 மணிக்கு வரப்பட்டது. வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது வரவேற்பறையில் மூன்று நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். வரவேற்பறைக்கு அடுத்து வடக்கு முகம் பார்த்தவாறு இருந்த அறையில் வடக்கு முகம் பார்த்தவாறு சார்பதிவாளர் இருக்கையில் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் என்னையும் அவரையும் அறிமுகம் செய்து கொண்டு அவரைப்பற்றி கேட்க அவரது பெயர் திரு.T.ஜெயக்குமார் என்றும், வேடசந்தூர் சார்பதிவக உதவியாளர் / பொறுப்பு சார்பதிவாளராக கடந்த 01.07.2026 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்ய வந்த விபரத்தை தெரிவித்து சோதனைக்கு ஒத்துழைக்குமாறு காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டார். அவரும் சோதனைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் பொறுப்பு சார்பதிவாளர் திரு.T.ஜெயக்குமார் அவர்களிடம் அலுவலகத்தின் வருகைப் பதிவேட்டையும், தனிநபர் பணஇருப்பு பதிவேட்டையும் ஆஜர் செய்யும்படி கேட்டுக்கொண்டார். வருகைப்பதிவேட்டில் நேற்று 27.08.2026-ம் தேதி பொறுப்பு சார்பதிவாளர் திரு.T.ஜெயக்குமார், இளநிலை உதவியாளர்கள்

திரு.K.ஆலம்கீர் மற்றும் திரு.D.தினேஷ் ஆகியோர் சுருக்கொப்பம் செய்திருந்தனர். DEO & IPCO பணியாளர்களின் வருகைப் பதிவேட்டினை பார்வையிட்டதில் திருமதி.S.M.கவிதா, Data Entry Operator மற்றும் திருமதி.K.ரமா பிரபா, IP Camera Operator ஆகியோர் பெயர்கள் இருந்தது. இருவரும் ஆகஸ்ட் மாதம் கையொப்பம் வருகை பதிவேட்டில் கையொப்பம் இடவில்லை. மேலும் திருமதி.S.M.கவிதா, Data Entry Operator அவர்கள் ஆஜரில் இருந்தார். திருமதி.K.ரமாபிரபா, IP Camera Operator அலுவலக பணிமுடித்து சென்றுவிட்டார். பின்னர் தனிநபர் பணஇருப்பு பதிவேட்டை ஆய்வு செய்தபோது இன்று பண இருப்பாக கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டு சுருக்கொப்பம் இடப்பட்டிருந்தது.

வ. எண்	அலுவலரின் பெயர் மற்றும் பதவி	கையிருப்பு விபரம்
1.	திரு.K.ஆலம்கீர், இளநிலை உதவியாளர்,	ரூ.500/-
2.	திரு.D.தினேஷ், இளநிலை உதவியாளர்,	ரூ.400/-
3.	திருமதி.S.M.கவிதா, Data Entry Operator	ரூ.100/-
4.	திருமதி.ரமாபிரபா, Camera Operator	ரூ.500/-

பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் என் முன்பாக பொறுப்பு சார்பதிவாளர் திரு.T.ஜெயக்குமார் அவர்களை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த பழுப்பு நிற முழுக்கை சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் ஐநூறு ரூபாய் தாள் 1 எண்ணிக்கையில் ரூ.500/- மற்றும் இருநூறு ரூபாய் தாள்கள் மூன்று எண்ணிக்கையில் ரூ.600/-, நூறு ரூபாய் தாள்கள் நான்கு எண்ணிக்கையில் ரூ.400/-, இருபது ரூபாய் தாள் 1 எண்ணிக்கையில் ரூ.20/- மற்றும் பத்து ரூபாய் தாள் 1 எண்ணிக்கையில் ரூ.10/- என மொத்தம் ரூ.1,530/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து சார்பதிவாளர் திரு.T.ஜெயக்குமார் அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் அவரது சொந்தபணம் என்று தெரிவித்தார். ஆனால் இன்றைய அலுவலக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் அவரது கையிருப்பு விபரம் குறிப்பிடப்படாததாலும், அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் பத்திர பதிவு செய்ய வந்த பொதுமக்களிடம் பத்திரங்களை பதிவு செய்து தந்ததற்காக லஞ்சமாக

கேட்டுப்பெற்ற பணம் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் ரூ.1,530/- விசாரணைக்காக என் முன்பாக மகஜரில் கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே வடகிழக்கு மூலையில் இருந்த கணிணி முன்பு அமர்திருந்த திருமதி.S.M.கவிதா, Data Entry Operator அவர்களை என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.J.ரூபா கீதாராணி அவர்கள் சோதனை செய்ய, அவரது கைப்பையில் ஐநூறு ரூபாய் தாள்கள் 2 எண்ணிக்கையில் ரூ.1,000/- மற்றும் நூறு ரூபாய் தாள் ஒன்று என மொத்தம் ரூ.1,100/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் பற்றி அவரிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் அவரது சொந்தபணம் என்று தெரிவித்தார். ஆனால் இன்றைய அலுவலக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் அவரது கையிருப்பாக ரூ.100/- மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்ததாலும், அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் பத்திர பதிவு செய்ய வந்த பொதுமக்களிடம் லஞ்சமாக கேட்டுப்பெற்ற பணம் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் ரூ.1,000/-ம் மட்டும் விசாரணைக்காக என் முன்பாக மகஜரில் கைப்பற்றப்பட்டது. தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் அவரது கையிருப்பாக குறிப்பிட்டிருந்த பணம் ரூ.100/- என் முன்பாக அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சார்பதிவாளர் இருக்கைக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த நபரை என் முன்பாக விசாரிக்க, அவரது பெயர் திரு.A.பிச்சைமுத்து எனவும், கடந்த 2021ம் வருடம் முதல் தற்காலிக பணியாளராக இந்த அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை என் முன்பாக சோதனை செய்ய, அவர் அணிந்திருந்த ஜீன்ஸ் பேண்டின் வலது பக்க பின் பாக்கெட்டிலிருந்து ஐநூறு ரூபாய் தாள்கள் 60 எண்ணிக்கையில் ரூ.30,000/- தனியாகவும், ஐநூறு ரூபாய் தாள்கள் 19 எண்ணிக்கையில் ரூ.9,500/-, இருநூறு ரூபாய் தாள்கள் 10 எண்ணிக்கையில் ரூ.2,000/- மற்றும் நூறு ரூபாய் தாள்கள் 25 எண்ணிக்கையில் ரூ.2,500/- ஆக மொத்தம் ரூ.14,000/-ம் தனியாகவும் மற்றும் ஐநூறு ரூபாய் தாள்கள் 3

எண்ணிக்கையில் ரூ.1,500/-, இருநூறு ரூபாய் தாள்கள் 3 எண்ணிக்கையில் ரூ.600/- மற்றும் நூறு ரூபாய் தாள்கள் 6 எண்ணிக்கையில் ரூ.600/- ஆக மொத்தம் ரூ.2,700/-ம் தனியாகவும், ஆக மொத்தம் ரூ.46,700/- இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் அவர் அணிந்திருந்த சிவப்பு நிற முழுக்கை சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் நூறு ரூபாய் தாள்கள் 5 எண்ணிக்கையில் ரூ.500/- மற்றும் காக்கி நிற ரேப்பர் துண்டு சீட்டில் 27-8 என்று எழுதி அதற்கு கீழ் 13 நபர்களின் பெயர்களை சுருக்கமாக எழுதி அவர்களுக்கு எதிரே பணம் மற்றும் விபரங்கள் எழுதப்பட்டிருந்தது. அந்த துண்டு சீட்டில் குறிப்பிட்டிருந்த பணத்தினை கூட்டிப் பார்த்த போது மொத்தம் ரூ.47,500/- வந்தது. மேற்கண்ட பணம் ரூ.46,700/- மற்றும் துண்டுச் சீட்டு சம்மந்தமாக விசாரிக்க, அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததாலும், மேலும் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் பத்திர எழுத்தர்கள் மற்றும் பொதுமக்களிடம் லஞ்சமாக கேட்டுப்பெற்ற பணம் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் ரூ.46,700/- மற்றும் துண்டு சீட்டு விசாரணைக்காக என் முன்பாக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது சட்டைப் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.500/- பற்றி விசாரிக்க அவரது சொந்தப் பணம் என்று தெரிவித்ததால், அந்த பணம் என் முன்பாக அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சார்பதிவாளர் இருக்கைக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த மற்றொரு நபரை என் முன்பாக விசாரிக்க, அவரது பெயர் திரு.K.பாண்டியன் எனவும், இந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து, கடந்த 28.02.2026ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டதாகவும் தெரிவித்தார். அதன் பின்பு தற்காலிக பணியாளராக இந்த அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை என் முன்பாக சோதனை செய்ய, அவர் அணிந்திருந்த சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் ஐநூறு ரூபாய் தாள் 1 எண்ணிக்கையில் ரூ.500/- மற்றும் நூறு ரூபாய் தாள்கள் 2 எண்ணிக்கையில் ரூ.200/-, இருபது ரூபாய் தாள்கள் 3 எண்ணிக்கையில், ரூ.60/- மற்றும் பத்து ரூபாய் தாள் 1 எண்ணிக்கையில்

ரூ.10/-, தனியாக 100 ரூபாய் தாள் ஒன்றும் என மொத்தம் ரூ.870/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் பற்றி அவரிடம் விசாரிக்க, அவரது சொந்தப் பணம் என்று தெரிவித்தார். மேலும் அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததால் பணம் ரூ.770/- என் முன்பாக விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் பணம் ரூ.100/- மட்டும் அவரது சொந்தப் பணமாக கருதி, திரும்ப என் முன்பாக அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையினை சோதனை செய்ய, சந்தேகத்திற்கிடமான பணமோ, பொருளோ கைப்பற்றப்படவில்லை. மேலும் சார்பதிவாளர் அறைக்கு மேற்கு பக்கம் சுற்றி கண்ணாடியால் தடுப்பு உள்ள அறையில் இருந்த திரு.K.ஆலம்கீர், இளநிலை உதவியாளர் அவர்களை என் முன்பாக சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.230/- இருந்தது. ஆனால் இன்றைய அலுவலக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் அவரது கையிருப்பாக குறிப்பிட்டுள்ள ரூ.500/- பற்றி கேட்ட போது மீதிப் பணம் செலவாகி விட்டதாக தெரிவித்தார். எனவே அலுவலக தனிநபர் பதிவேட்டில் பணத்தினை பதிவு செய்திருந்ததாலும், மேலும் அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் பணம் ரூ.230/- என் முன்பாக அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையில் இருந்த திரு.D.தினேஷ், இளநிலை உதவியாளர் அவர்களை என் முன்பாக சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.50/- இருந்தது. ஆனால் இன்றைய அலுவலக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் அவரது கையிருப்பாக குறிப்பிட்டுள்ள ரூ.400/- பற்றி கேட்ட போது மீதிப் பணம் செலவாகி விட்டதாக தெரிவித்தார். எனவே அலுவலக தனிநபர் பதிவேட்டில் பணத்தினை பதிவு செய்திருந்ததாலும், மேலும் அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் பணம் ரூ.50/- என் முன்பாக அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையினை சோதனை செய்ய, அந்த அறையின் தென் மேற்கு மூலையில் இருந்த ஜெராக்ஸ் மெசினை சோதனையிட ஜெராக்ஸ் மெசினின் மேற்புறம் நகல் எடுக்கும் பகுதியில் ஐநூறு ரூபாய் தாள்கள் 3 எண்ணிக்கையில் ரூ.1,500/- இருப்பது கண்டறியப்பட்டது.

அந்த அறையில் இருந்த கணிணிகள் மற்றும் டேபிள்களை சோதனை செய்ய, அதில் தெற்கு பக்கம் இருந்த ஒரு கணிணி மானிட்டரின் அடியில் ஐநூறு ரூபாய் தாள்கள் 10 எண்ணிக்கையில் ரூ.5,000/- மற்றும் நூறு ரூபாய் தாள்கள் இரண்டு எண்ணிக்கையில் ரூ.200/- என மொத்தம் ரூ.5,200/- இருப்பது கண்டறியப்பட்டது. மேற்கண்ட பணம் ரூ.1,500/- மற்றும் ரூ.5,200/- பற்றி அந்த அறையிலிருந்த இளநிலை உதவியாளர்கள் திரு.K.ஆலம்கீர் மற்றும் திரு.D.தினேஷ் ஆகியோரிடம் என் முன்பாக விசாரனை செய்ய, அந்த பணம் தங்களுடையது இல்லை எனவும், அது பற்றி தங்களுக்கு தெரியாது எனவும் தெரிவித்தனர். அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் பத்திர பதிவு செய்ய வந்த பொதுமக்களிடம் பத்திரம் பதிய லஞ்சமாக கேட்டுப்பெற்ற பணம் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் ரூ.1,500/- மற்றும் ரூ.5,200/- விசாரணைக்காக என் முன்பாக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் வரவேற்பு அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் வேடசந்தூர் தாலுகா, அச்சனப்பட்டியை சேர்ந்த திரு.சுப்பிரமணி மகன் திரு.S.மீனாட்சிசுந்தரம் எனவும், திண்டுக்கல், ரெட்டியப்பட்டி, தோட்டனூத்துவை சேர்ந்த அவரது நண்பர் திரு.மகாதேவன் என்பவருக்கு அவரது வீட்டை 21.08.2026 அன்று கிரையம் செய்து கொடுத்ததாகவும், மேற்படி வீட்டை அவரது நண்பர் திண்டுக்கல் கனரா வங்கியில் அடமானம் வைத்து வீட்டு லோன் வாங்குவதற்காக, வங்கிக்கு அடமான கடன் பத்திரம் ஒன்றை வங்கி பெயரில் தயார் செய்து நேற்று 27.08.2026ம் தேதி ஆவண எண் 3141/2026 ஆக வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததாகவும், இது சம்பந்தமான ஆவணத்தை திரு.மகாதேவன் அவர்கள் தன்னை வாங்கி வரச் சொன்னதன் பேரில் வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவரை ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்பாக சோதனை செய்ய, அவரிடம் ரூ.20/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் என் முன்பாக திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. வரவேற்பு அறையில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை

விசாரிக்க, அவர் வடமதுரை, R.S. ரோடு திரு.செல்வராஜ் அவர்களின் மகன் திரு.S.முருகானந்தம் எனவும், அவர் கடந்த இரண்டு வருடங்களாக வேடசந்தூரை சேர்ந்த ஆவண எழுத்தர் திரு.ருத்ரமூர்த்தி என்பவரின் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், நேற்று 27.08.2026ம் தேதி அவரது அலுவலகம் சார்பாக 4 ஆவணங்கள் பதிவு செய்ய வந்ததாகவும் தெரிவித்தார். அவரை என் முன்பாக சோதனை செய்ய, அவரிடம் ரூ.500/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் அவரது சொந்தப் பணம் என்று தெரிவித்ததால், அந்த பணம் என் முன்பாக திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. வரவேற்பு அறையில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க, அவர் பழனி தாலுகா, முல்லை நகரை சேர்ந்த திரு.அருளானந்தம் அவர்களின் மகன் திரு.A.செபஸ்தியார் எனவும், அவருக்கு சொந்தமாக TN 11 B 5261 என்ற எண்ணுள்ள Toyota Etios வாடகை கார் உள்ளதாகவும், அந்த காரில் நேற்று 27.08.2026ம் தேதி காலை 09.00 மணியளவில் வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வரும் திரு.ஜெயக்குமார் அவர்களை பழநியிலிருந்து அழைத்துக்கொண்டு வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு காலை சுமார் 10.30 மணிக்கு வந்து சேர்ந்ததாகவும், அவரை அலுவலகத்தில் இறக்கிவிட்டு காருடன் வெளியே சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். பின்பு மாலை சார்பதிவாளர் திரு.ஜெயக்குமார் அவர்கள் அழைத்ததின் பேரில் வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அலுவலகத்திற்கு வெளியே காரை நிறுத்திவிட்டு வரவேற்பு அறையில் அமர்ந்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரை என் முன்பாக சோதனை செய்ய, அவரிடம் ரூ.700/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் அவரது சொந்தப் பணம் என்று தெரிவித்ததால், அந்த பணம் என் முன்பாக திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த ஆவணம் வாபஸ் குறித்து பதிவேடு 21.03.2025 முதல் என இருந்த பதிவேட்டினை ஆய்வு செய்ததில் 18.05.2026-ம் தேதிக்கு பின்பு எந்தவொரு ஆவணமும் வாபஸ் பெறப்பட்டதாக பதிவுகள் இல்லை. மேலும் நேற்று 27.08.2026-ம் தேதி பதிவு செய்யப்பட்ட

ஆவணங்களின் விபரம் பற்றி பொறுப்பு சார்பதிவாளர் அவர்களிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க, கணிணியில் நகல் எடுத்து சான்றொப்பம் இட்டு வழங்கினார். அந்த விபரம் அடங்கிய தாள் 1 விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. சோதனையின் போது கண்டறியப்பட்ட கணக்கில் வராத ரூ.56,700/- பணமானது பத்திரப் பதிவிற்கு வரும் பொதுமக்கள் மற்றும் பத்திர எழுத்தர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருந்ததால், கீழ்கண்டவாறு பணம் கைப்பற்றப்பட்டது.

வ. எண்	அலுவலரின் பெயர் மற்றும் பதவி	கைப்பற்றப்பட்ட பணம் விபரம்
1.	பொறுப்பு சார்பதிவாளர் திரு.T.ஜெயக்குமார் அவர்களின் பழுப்பு நிற முழுக்கை சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் கண்டறியப்பட்ட பணம்	ரூ.1,530/-
2.	Data Entry Operator திருமதி.S.M.கவிதா அவர்களின் கைப்பையில் கண்டறியப்பட்ட பணம்	ரூ.1,000/-
3.	தற்காலிக பணியாளர் திரு.A.பிச்சை முத்து அவர்களின் ஜீன்ஸ் பேண்டின் வலது பக்க பின் பாக்கெட்டில் கண்டறியப்பட்ட பணம்	ரூ.46,700/-
4.	தற்காலிக பணியாளர் திருமதி.K.பாண்டியன் (முன்னால் அலுவலக உதவியாளர் - ஓய்வு) அவர்களின் சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் கண்டறியப்பட்ட பணம்	ரூ.770/-
5.	கணிணி அறையில் இருந்த ஜெராக்ஸ் மெசினின் மேற்புறம் நகல் எடுக்கும் பகுதியில் கண்டறியப்பட்ட பணம்	ரூ.1,500/-
6.	கணிணி அறையில் இருந்த ஒரு கணிணி மானிட்டரின் அடியில் கண்டறியப்பட்ட பணம்	ரூ.5,200/-
	மொத்தம்	**ரூ.56,700/-**

மேலும் சோதனையின் போது நான் சார்பதிவாளர் திரு.T.ஜெயக்குமார் மற்றும் அலுவலகத்தில் இருந்த பிற பணியாளர்கள் மற்றும் தனிநபர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இத்திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மன

ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 27.08.2026ம் தேதி 18.50 மணி முதல் 23.00 மணிவரை தயார் செய்யப்பட்டது. எனவே மேற்படி கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.56,700/- தொடர்பாக 1) திரு.T.ஜெயக்குமார் வயது 46/2026, த/பெ தண்டபாணி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், வேடசந்தூர் சார்பதிவகம், திண்டுக்கல், மாவட்டம். 2) திருமதி.S.M.கவிதா வயது 42/2026, க/பெ வெள்ளைச்சாமி, கணிணிவிபர பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம், 3) திரு.K.பாண்டியன், வயது 61/2026, த/பெ காளியப்பன், அலுவலக உதவியாளர் (ஓய்வு), தற்காலிக பணியாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம் மற்றும் 4) திரு.A.பிச்சைமுத்து, வயது 30/2026, த/பெ.திரு.அரிச்சந்திரன், தற்காலிக பணியாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxxx (Tr.R.Veerachelian), 28.08.2026.

Sir,

Received the complaint on 28.08.2026 at 16.15 hrs. and registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.13/2026 u/s 7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the Prevention of Corruption (Amendment) act 2018 on 28.08.2026 at 16.15 hrs. Sd/- xxxxxx (Tmt.J.Rupa geetharani, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Dindigul 28.08.2026).

Original FIR along with the complaint of Tr.R.Veerachelian, Inspection Cell Inspector, Inspection Cell Office, Madurai and the Joint surprise check proceedings are submitted to the Hon'ble Principal District Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

28/08/26

Inspector of Police
Vigilance and Anti-Corruption
DINDIGUL